

16.11.2026 செய்திகள்

மனித மனத்தின் எல்லைகளைத் தொட்ட படை

- எம்.ஜான் ஹாரிசனின் 'தி எண்ட் ஆஃப் எவரிதிங்' (The End of Everything), லூக் கென்னர்டின் 'பிளாக்பேக்' (Black Bag), டக்ளஸ் ஸ்டுவர்ட்டின் 'ஜான் ஆஃப் ஜான்' (John of John), ரெபேக்கா பெர்ரியின் 'மே வி ஃபீட் தி கிங்' (May We Feed the King), மார்லன் ஜேம்ஸின் 'தி டிஸப் பியரர்ஸ்' (The Disappearers) மற்றும் எலிசபெத் ஸ்ட்ரூட்டின் 'தி திங்ஸ் வி நெவர் சே' (The Things We Never Say) ஆகிய ஆறு நாவல்கள் அடங்கிய இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டது.
- இறுதியாக, கடந்த நவம்பர் 9 ஆம் தேதியன்று லண்டனில் உள்ள ஓல்ட் பில்லிங்ஸ்கேட் அரங்கில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், பிரிட்டிஷ் எழுத்தாளர் எம்.ஜான் ஹாரிசன் எழுதிய 'தி எண்ட் ஆஃப் எவரிதிங்' நாவல் 2026 ஆம் ஆண்டின் புக்கர் பரிசு பெறுவதாக ஒருமனதாக அறிவிக்கப்பட்டது.
- 'தி எண்ட் ஆஃப் எவரிதிங்' நாவல், எதிர்காலத்தைப் பற்றிய கற்பனைக் கதையாக அமைந்திருந்தாலும், அது நம் நிகழ்காலத்தின் உளவியல் பதற்றங்களை அப்படியே பிரதிபலிக்கிறது.
- வழக்கமான அறிவியல் நாவல்களைப் போல எதிர்காலத் தொழில்நுட்பங்களை விளக்கமாக விவரிப்பதோ அல்லது அதற்கான பிரம்மாண்டமான காரணங்களைக் கற்பிப்பதோ இந்நாவலின் நோக்கமல்ல. மாறாக, மனிதப் புரிதலின் எல்லைகள் எங்குத் தோன்கின்றனவோ, அங்கே மொழி எவ்வாறு செயலிழந்து போகிறது என்பதை ஆழமாகப் பேசுகிறது.
- இங்கிலாந்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதிதான் நாவலின் கதைக்களம். கடற்கரையோரம் ஒதுங்கும் பழம்பொருட்களைச் சேகரிப்பதைத் தொழிலாகக் கொண்ட ஃபிலிப் டெனன்ட், அவரது வயதான அத்தை மார்னி ஆகிய இருவரை மையமாகக் கொண்டு கதை நகர்கிறது.
- அப்பகுதியைத் தலைகீழாகப் புரட்டிப் போட்ட ஒரு பேரழிவு நிகழ்ந்து பல ஆண்டுகள் கடந்து விட்டன. எனினும், இன்றுவரை அந்தப் பேரழிவு எதனால், எப்படி ஏற்பட்டது என்ற உண்மை விளங்காமல் மர்மமாகவே நீடிக்கிறது. தற்போது கடலில் புதிய மற்றும் விசித்திரமான உயிரினங்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. இச்சூழலில், புதிரான பொருள் ஒன்றை ஃபிலிப் டெனன்ட் கடலிலிருந்து கண்டெடுக்கிறார்.
- ஒவ்வொரு விநாடியும் உருமாறிக்கொண்டே இருக்கும் அந்த மர்மப் பொருள், தன்னை நிர்வகிக்கும் மனிதர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கட்டளையிடத் தொடங்குகிறது. ஏதோ ஒரு பேரழிவை நிகழ்த்த வந்த பொருள் என அஞ்சிய ஃபிலிப், அனைத்தையும் அது அழித்து விடுவதற்கு முன்பாக, அந்தப் பொருளை உள்நாட்டுக்குள் எடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிறார்.
- 'லிட்டரரி ரிவ்யூ' இதழில் திறனாய்வாளர் ஒலிவியா ஹோ குறிப்பிடுகையில், ''அன்றாட வாழ்க்கையில் நொடியில் எல்லாம் சரிந்துவிடுமோ என்ற பயம் எல்லோரையும் துரத்துகிறது.
- இப்படிப்பட்ட சூழலில் இன்றைய நிகழ்காலப் பதற்றங்களை இந்நாவல் மிகத் துல்லியமாகப் பிரதிபலிக்கிறது. மென்மையும் திகிலும் சரிவிகிதத்தில் கலந்த விசித்திரமானதொரு அழகியல் படைப்பு இது'' என்று பாராட்டியுள்ளார்.
- சமூக நெறிமுறைகள் சிதைந்து, பழைய விதிகள் எதற்கும் உதவாமல் போகும்போது, ஒரு பேரழிவு எவ்வாறு நம் புத்திக்கு எட்டாத ஒன்றாக மாறுகிறது என்பதை இந்நாவல் மிக ஆழமாகப் பேசுகிறது.
- இன்றைய டிஜிட்டல் மற்றும் போருக்குப் பிந்தைய உலக அரசியலின் பதற்றங்களை எதிர்காலத்தின் கற்பனைக் கண்ணாடி ஒன்றின் ஊடாக எம்.ஜான் ஹாரிசன் நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார்.

இந்தியா உள்ளிட்ட 'க்வாட்'

- 11 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஆசியான் கூட்டமைப்புக்கு நிகழாண்டு பிலிப்பின்ஸ் தலைமை தாங்குகிறது.
- க்வாட் கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ள இந்தியா மட்டுமின்றி அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலைவர்களும் இதில் பங்கேற்பார்கள்.

உலக வரலாற்றில் முதல்முறையாக விண்வெளியிலிருந்து திரும்பிய

விண்கலத்தை இயந்திர கைகளால் பிடித்து சாதனை

- உலக வரலாற்றில் முதல்முறையாக விண்வெளியில் இருந்து பூமிக்கு திரும்பிய "ஸ்டார்ஷிப்" விண்கலத்தை இரும்பு கோபுரத்தின் இயந்திர கைகள் மிக துல்லியமாகப் பிடித்து உள்ளது.
- இதன்மூலம் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் புதிய சாதனையைப் படைத்திருக்கிறது. அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம், ஸ்டார்பேஸ் பகுதியில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ராக்கெட் ஏவுதளம் அமைந்துள்ளது. அங்கு 479 அடி உயரம், 44 அடி அகலத்தில் இரு இரும்பு கோபுரங்கள் கட்டப்பட்டு உள்ளன. இந்த கோபுரங்களில் இருந்தே ஸ்டார்ஷிப் ராக்கெட்டுகள் ஏவப்படுகின்றன.
- டெக்சாஸ் மாகாணம், ஸ்டார்பேஸ் தளத்தில் இரும்பு கோபுரத்தில் இருந்து 403 அடி நீளம் கொண்ட ஸ்டார்ஷிப் ராக்கெட் விண்ணில் சீறிப் பாய்ந்தது.
- விண்வெளிக்குள் நுழைந்தபோது ராக்கெட்டில் இருந்து தனியாகப் பிரிந்த விண்கலம், 26 செயற்கைக் கோள்களை அடுத்தடுத்து நிலைநிறுத்தியது.
- விண்வெளி சுற்றுப்பாதையில் சுமார் 22 மணி நேரம் சுற்றிய ஸ்டார்ஷிப் விண்கலம் இரும்பு கோபுரத்துக்கு திரும்பி வந்தது. அப்போது இரும்பு கோபுரத்தின் இயந்திர கைகள், விண்கலத்தை மிகவும் துல்லியமாகப் பிடித்தது.

எல் நினோ.... தமிழக மழைக்கு சாதகமா? சவாலா?

» வடகிழக்குப் பருவமழை ஏன் முக்கியம்?

- தமிழகம் புதுச்சேரியின் ஆண்டு மழைப்பொழிவில் கணிசமான பங்கு அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் கிடைக்கிறது. தென்மேற்குப் பருவமழையைவிட வடகிழக்குப் பருவமழையைச் சார்ந்தே தமிழகத்தின் டெல்டா மாவட்டங்கள் உள்பட பல மாவட்டங்கள் உள்ளன.
- வடகிழக்குப் பருவமழையின் போக்கு தமிழகத்தின் விவசாயத்திலும் நீர்வள மேலாண்மையிலும் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும். மழை தாமதமாவது, நீண்ட இடைவெளி ஏற்படுவது அல்லது குறுகிய காலத்தில் அதிக மழை பெய்வது ஆகியவை பயிர்களின் வளர்ச்சியையும் வயல்களில் நீர் மேலாண்மையையும் பாதிக்கக்கூடும்.
- மழை குறைவாகப் பெய்யும் பகுதிகளில் ஏற்கெனவே உள்ள நீரர்நிலைகளின் இருப்பு, பாசனத்துக்கான நீர்தேவை, குடிநீர் விநியோகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்துத் திட்டமிட வேண்டியிருக்கும்.
- மாறாக, குறுகிய நேரத்தில் அதிக மழை பெய்யும் பகுதிகளில் நீர்த்தேக்கங்களுக்கு நீர்வரத்து திடீரென அதிகரிப்பதுடன், தாழ்வான குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேங்குதல், நகர்ப்புற வெள்ளம் போன்ற அபாயங்களும் உருவாகலாம்.
- சென்னை போன்ற நகரங்களில் மழையின் மொத்த அளவை மட்டும் கணக்கில் கொள்ளாமல், ஒரு மணி நேரத்தில் பெய்யும் மழையின் தீவிரம், வடிகால் வசதிகள், நீர்நிலைகளின் நிலை ஆகியவற்றையும் கண்காணிக்க வேண்டும்.

» எல்நினோ என்றால் என்ன? பருவமழை அளவை தீர்மானிக்கிறதா?

- பசிபிக் பெருக்கடலின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் காணப்படும் கடல் மேற்பரப்பு வெப்பநிலை வழக்கத்தை விட உயர்வதால், அதனுடன் தொடர்புடைய வளிமண்டலச் சுழற்சியிலும் மாற்றங்கள் ஏற்படுவது எல்நினோ எனப்படுகிறது.

- இந்தியாவின் பருவமழையிலும் எல்நினோ தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்றாலும், தமிழகத்தின் வடகிழக்குப் பருவ மழையின் மீது அது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை, எல் நினோவின் பலவீனத்தையோ, வலிமையையோ மட்டும் வைத்து முடிவு செய்ய இயலாது.
- கடந்த காலத்தில், எல் நினோ நிலவிய ஆண்டுகளில் தமிழகத்தில் மழைப்பொழிவு ஒரே மாதிரியாக இருக்கவில்லை.
- எனவே, எல் நினோ உருவானால் தமிழகத்தில் மழை கட்டாயம் குறையும் அல்லது அதிகரிக்கும் என்ற பொதுவான முடிவுக்கு வருவது சரியாக இருக்காது.

» எல் நினோ மட்டுமே காரணமல்ல!

- தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழையின் போக்கைத் தீர்மானிப்பதில் எல் நினோவுடன் வேறு பல காரணிகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- வங்கக் கடலில் உருவாகும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதிகள், வளிமண்டல மேலடுக்கு சுழற்சிகள், காற்றின் திசை மற்றும் வேகம், இந்தியப் பெருங்கடலின் வெப்பநிலை நிலவரம் ஆகியவை மழையின் அளவையும், மேகப் பரவலையும் மாற்றக்கூடும்.
- இந்தியப் பெருங்கடல் இருமுனைக் குறியீடு உள்ளிட்ட கடல் – வளிமண்டலக் காரணிகளும் பருவமழையின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

» வங்கக்கடல் காற்றழுத்த தாழ்வுப் பகுதிகளின் பங்கு

- தமிழகத்தின் வடகிழக்குப் பருவமழையைத் தீர்மானிப்பதில் வங்கக் கடலில் உருவாகும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதிகளும் புயல்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- இத்தகைய வானிலை மாற்றங்கள் தமிழகக் கடலோரத்தில் நிகழும்போது, சில நாள்களில் மிக அதிக மழை பெய்ய வாய்ப்புள்ளது.
- அதே நேரத்தில், அவற்றின் நகர்வுப் பாதை மாறினால் மழைப்பொழிவு வேறு பகுதிகளுக்கு மாறக்கூடும்.
- மேலும். இந்தியப் பெருங்கடலின் வானிலைச் சுழற்சிகளும் மழையின் தீவிரத்தையும் பரவலையும் பாதிக்கின்றன.
- எனவே, எல் நினோவை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தமிழகத்தின் மழைப்போக்கைக் கணிப்பது அறிவியல் பூர்வமான அணுகுமுறையாக இருக்காது என்பது வானிலை ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.
- ஏனெனில், எல் நினோ ஒரு வானிலை முன்னறிவிப்பு அல்ல, அது ஒரு காலநிலைக் குறியீடு மட்டுமே. எல் நினோவின் வலிமை, அது நீடிக்கும் காலம், இந்தியப் பெருங்கடலின் நிலை, வங்கக் கடலில் உருவாகும் வானிலை மாற்றங்கள் ஆகியவற்றைப் பொறுத்தே மழைப்பொழிவில் வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

» வானிலை முன்னறிவிப்புகளின் முக்கியத்துவம்

- பருவகால வானிலை முன்னறிவிப்பு என்பது அடுத்த சில மாதங்களில் மழை இயல்பைவிட அதிகமாகவோ, குறைவாகவோ அல்லது இயல்பாகவோ, குறைவாகவோ அல்லது இயல்பான அளவிலோ இருக்கக்கூடும் என்பதை நிகழ்தகவு அடிப்படையில் தெரிவிப்பதாகும்.
- ஆனால், அடுத்த 24 முதல் 72 மணி நேரத்தில் எந்த மாவட்டத்தில் மழை பெய்யும், எங்கு பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது என்பதைக் குறிப்பது குறுகியகால வானிலை முன்னறிவிப்பாகும்.

» எல் நினோவின் தாக்கங்கள்

- **வறட்சி மற்றும் நீர்ப்பாற்றாக்குறை :** சில பகுதிகளில் மழை குறைவதால் நீர்த் தேக்கங்கள், ஏரிகள், நிலத்தடி நீர் ஆகியவற்றின் இருப்பு குறையலாம். குடிநீர் விநியோகத்திலும் பாதிப்பு ஏற்படக்கூடும்.
- **பலத்த மழை மற்றும் வெள்ளம் :** உலகின் சில பகுதிகளில் வழக்கத்தை விட அதிக மழை பெய்யலாம். ஆறுகளில் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு, குடியிருப்புப் பகுதிகளில் நீர்த்தேக்கம் போன்ற அபாயங்கள் அதிகரிக்கலாம்.
- **விவசாய உற்பத்தி பாதிப்பு :** மழை தாமதம், வறட்சி அல்லது அளவுக்கு அதிகமான மழை காரணமாக விதைப்பு, பயிர் வளர்ச்சி, அறுவடை ஆகியவை பாதிக்கப்படலாம். இதனால் உணவு உற்பத்தியும் விவசாயிகளின் வருமானமும் குறைய வாய்ப்புள்ளது.

- **வெப்பநிலை அதிகரிப்பு :** எல் நினோ உலகளாவிய சராசரி வெப்பநிலையை உயர்த்தும் போக்கைக் கொண்டுள்ளது.
- **காட்டுத்தீ அபாயம் :** வறட்சி மற்றும் அதிக வெப்பம் நிலவும் பகுதிகளில் தாவரங்கள் காய்ந்து, காட்டுத்தீ ஏற்படுவதற்கான சூழல் உருவாகலாம்.
- **கடல் வளம், மீன்வளம் பாதிப்பு :** கடல் நீரின் வெப்பநிலை மற்றும் ஊட்டச்சத்துச் சுழற்சிகளில் ஏற்படும் மாற்றங்கள் மீன்களின் பரவல், இனப்பெருக்கம், மீன்பிடி வருவாய் ஆகியவற்றைப் பாதிக்கலாம்.
- **சுகாதாரப் பிரச்சினைகள் :** வெள்ளம், தேங்கிய நீர், வெப்ப அலைகள், குடிநீர்த் தரம் பாதிக்கப்படுதல் போன்றவற்றால் தொற்றுநோய் அபாயங்களும் வெப்பம் சார்ந்த உடல்நலப் பிரச்சனைகளும் அதிகரிக்கலாம்.
- **பொருளாதார பாதிப்புகள் :** விவசாய இழப்பு, மீன்பிடி பாதிப்பு, குடிநீர் பற்றாக்குறை, வெள்ளச் சேதம் மற்றும் பேரிடர் மீட்புச் செலவுகள் ஆகியவை உள்ளூர் பொருளாதாரத்தைப் பாதிக்க வாய்ப்பிருக்கிறது.

» மழையைத் தீர்மானிக்கும் முக்கிய அமைப்புகள்

» காற்றழுத்தத்தாழ்வுப் பகுதி

- வளிமண்டலத்தில் காற்றழுத்தம் குறையும் பகுதியில் காற்று ஒன்றுகூடி மேலே எழும்புகிறது. ஈரப்பதம் போதுமானதாக இருந்தால் மேகங்கள் உருவாகி மழை பெய்யலாம். வங்கக் கடலில் உருவாகும் இத்தகைய அமைப்புகள் தமிழக மழைக்கு முக்கியமானவை.

» புயல் மற்றும் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்

- இவை காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியைவிட, வலுவான காற்றுச் சுழற்சிகளைக் கொண்ட அமைப்புகள். இவை நகரும் பாதை மற்றும் வேகத்தைப் பொறுத்து கனமழை, மிகக் கனமழை, வெள்ளம் போன்றவை ஏற்படலாம்.

» வளிமண்டல மேலடுக்கு சுழற்சி

- வளிமண்டலத்தின் குறிப்பிட்ட உயரத்தில் உருவாகும் சுழற்சி, காற்று மேலெழுவதற்கும் மேகங்கள் உருவாவதற்கும் சாதகமான சூழலை ஏற்படுத்தலாம். இது சில நேரங்களில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக வலுப்பெறவும் வாய்ப்புள்ளது.

» காற்று ஒன்றுகூடும் மண்டலம்

- வெவ்வேறு திசைகளிலிருந்து வரும் காற்று சந்திக்கும் பகுதியில் காற்று மேலெழும்புகிறது. ஈரப்பதம் அதிகமாக இருந்தால் இடியுடன் கூடிய மழையும் பரவலான மழையும் உருவாகலாம்.

» காற்றழுத்தத் தாழ்வுப் பள்ளம்

- நீண்ட பகுதியாக நீளும் தாழ்ந்த காற்றழுத்த மண்டலம் இது. அதன் அமைவிடம், நகர்வு, அதனுடன் இணையும் காற்றுச் சுழற்சிகள் ஆகியவற்றைப் பொறுத்து மழையின் பரவல் மாறும். இந்தியாவின் தென்மேற்குப் பருவமழையில் காற்றழுத்தத் தாழ்வுப் பள்ளம் முக்கியமான பங்கை வகிக்கிறது.

» வெப்பச்சலன மேகங்கள்

- தரைப்பரப்பு வெப்பமடைவதால் ஈரமான காற்று வேகமாக மேலெழுந்து, உயரமான மழை மேகங்கள் உருவாகலாம். இவை இடியுடன் கூடிய கனமழையை ஏற்படுத்தக்கூடும். குறிப்பிட்ட இடங்களில் குறுகிய நேரத்தில் அதிக மழை பெய்ய இது ஒரு காரணமாகும்.

» கிழக்கிந்திய அலைகள்

- வெப்பமண்டலப் பகுதிகளில் கிழக்கிலிருந்து மேற்காக நகரும் வளிமண்டல அலைகள் இவை. ஈரப்பதம் மற்றும் காற்று மேலெழும் செயல்பாட்டை மாற்றி, வங்கக்கடல் மற்றும் தென்னிந்தியாவில் மழை உருவாக இவையும் காரணமாகலாம்.

» மேடன் ஜூலியன் அலைவு

- வெப்ப மண்டலத்தில் மேகங்கள், காற்று, மழை, ஆகியவற்றில் ஏற்படும் பெரிய அளவிலான மாற்றம். இதன் சுழற்சி பொதுவாக 30–60 நாள்கள் நீடிக்கும். இந்தியப் பெருங்கடல் பகுதியில் இதன் சாதகமான கட்டம் நிலவும்போது மழைச் செயல்பாடு அதிகரிக்கலாம்; மற்ற கட்டங்களில் குறையலாம்.